தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

ஆகஸ்ட் 2024

மரம் 24 கனி 9

கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜூனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 56
தலைப்பு : நியாயத்தீர்ப்பு - Judgment
வேத வாசிப்பு : சங்கீதம் 96:13

1. அவர் பூலோகத்தை - சங்.96:13
2. நான் நியாயந்தீர்த்தால் - யோவா.8:15
3. மரித்தோர் தங்கள் - வெளி.20:12




மாத இதழுக்கான
சந்தா செலுத்த மூன்று வழிகள்

G-Pay & PhonePe - 9443558041



India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946
Branch Batlagundu

Contact Us: 6379350509

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
## டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

**Our TV Program: Six Days of the Week**

*Every Monday, Tuesday &*
*Wednesday 6.00 P.M on Joy TV*
*Every Thursday, Friday &*
*Saturday 6.00 P.M on Heaven TV*

YouTube : the word of christ







**THE WORD OF CHRIST**
**Monthly Magazine**
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 24 ஆகஸ்ட் -2024 கனி - 9


ஆசிரியருரை

## விழித்திரு - Watch



**தூ**ங்குகிறவர்களைப் பார்த்து விழித்திரு எழுந்திரு என்றால் அவர்களுக்கு அது கடினமாகத்தான் தோன்றும். சரியான நேரத்திலே வந்து இப்படி தொல்லை கொடுக்கிறார்களே என்று சலித்துக்கொள்ளுவார்கள். நம்முடைய வாழ்க்கையில் எப்பொழுதும் விழிப்புணர்வு உள்ளவர்களாக இருக்கவேண்டும். விழிப்பாக இல்லாவிட்டால் அநேக ஆசீர்வாதங்களை நாம் இழக்கநேரிடும். இயேசுவானவர் சொல்லும்போது; "நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள் என்றார்" (மாற்கு 13:37). இதை அப்போஸ்தலர்களுக்கு மட்டுமல்ல எல்லாருக்கும் சொல்லுகிறார். அவரைப்பின்பற்றுகிற யாவரும் விழித்திருக்கும்படியாக சொல்லுகிறார்.

நம் ஆண்டவர் இயேசு எப்பொழுதும் விழித்திருந்து ஜெபம் பண்ணினார் எனக்காண்கிறோம். ஆகையால் "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்" (மத்.26:41). ஆவி ஆவிக்குரிய காரியங்களை நினைக்கிறது. மாம்சமோ மாம்சத்துக்குரிய காரியங்களை நினைக்கிறது. ஒன்றுக்கொன்று விரோதமாக இருக்கிறது. இதில் ஆவி உற்சாகமுள்ளதாக இருக்கிறது. இந்த ஆவியில் நீங்கள் சோர்ந்துபோகாது விழித்திருந்து ஜெபிக்க வேண்டும். பாருங்கள் பொதுவாக ஜெபம் என்றவுடன் அநேகருக்கு தூக்கம் வந்துவிடும். அதுவரை உற்சாகமாக இருப்பார்கள். ஆனால் ஜெபம்பண்ணுவோம் என்றால் தூக்கம் வருகிறது என்பார்கள். இவைகளை மேற்கொண்டு நாம் விழித்திருந்து ஜெபிக்க போதிக்கப்படுகிறோம். கர்த்தருடைய வருகை மிக சமீபமாக இருக்கிறபடியால் நாம் விழித்திருந்து ஜெபிக்கவேண்டும். "அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருந்து விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்கிறார்" (மாற்.13:33).

கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கிறது என்று பல வருடங்களாக சொல்லிக்கொண்டுதான் வருகிறார்கள். இன்னும் அவர் வரவில்லை 2000-மாவது ஆண்டில் வருவதாக சொன்னார்கள் வரவில்லை. 2010-ல் அவர் வருகிறார் என்றார்கள் வரவில்லை என்று நாம் மெத்தனமாக இருந்துவிடக்கூடாது. அவர் வரும் வேளையை ஒருவரும் அறியார்கள். தேவதூதர்களும் அறியார்கள் எனக்காண்கிறோம். ஆனால் அவர் சீக்கிரமாய் வருகிறார் என்ற செய்தியை நாம் வேதத்தில் காண்கிறோம். ஆகையால நாம் எச்சரிக்கையாயிருந்து ஆவியில் விழித்திருந்து ஜெபம்பண்ண வேண்டும்.

"உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டதே" (எபி.13:17). கர்த்தருடைய ஊழியர்கள் விழித்திருந்து மந்தையை காக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் உங்களுடைய ஆத்துமாக்களுக்கு உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

ஆகையால் அப்படிப்பட்டவர்களை நீங்கள் மதித்து அவர்கள் சந்தோஷத்தோடே கர்த்தருடைய ஊழித்தைச் செய்யும்படி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இருக்கும்படியாக போதிக்கப்படுகிறோம். ஒருவேளை அவர்களைப்பார்த்து முறுமுறுத்துக்கொண்டோ அல்லது அவர்களுக்கு விரோதமாகவோ செயல்படுவோமானால் நாம் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்த மக்களாகிய; கோராகு, தாத்தான் கூட்டத்தாரை நினைத்துப்பார்க்கவேண்டும். அவர்களை பூமி விழுங்கிப்போட்டது. தேவனால் நியமிக்கப்பட்ட ஊழியர்களை மதித்து அவர்களுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவேண்டும். அவர்கள் சந்தோஷத்தோடே ஒவ்வொருநாளும் ஊழியத்தைச் செய்யும்படி அவர்களை ஊக்கப்படுத்தவேண்டும். அவர்கள் ஒருவேளை துக்கத்தோடே அந்த ஊழியத்தை செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாய் இருக்காது.

"ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள (அன்னாள் என்ற) அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள்" என லூக்.2:37-ல் படிக்கிறோம். இவள் தன்னுடைய விதவையின் காரியத்தை நினைத்து, நினைத்து வேதனைப்பட்டிருப்பாளேயானால்; இவள் இந்த அளவு தேவாலயத்தை விட்டு நீங்காமல் ஜெபித்திருக்க முடியாது. தன் தேவனை சந்திக்க வேண்டும். பூமியில் உள்ளளவும் தேவனுடைய திருசித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற விடாமுயற்சியில் விழிந்திருந்து ஜெபிக்கிற ஒரு மகளாக இருந்துவந்தாள். 60 வயதைக் கடந்துவிட்டாலே வயதாகிவிட்டது என்னால் எங்கும் வரமுடியாது என்று சொல்லிவிடுவார்கள். ஆனால் 84 வயதிலும் உறுதியுடனிருந்த இந்த அன்னாளை நாம் வாசிக்கும்போது நாமும் சோர்ந்துபோகாமல் ஜெபிக்க கற்றுக்கொள்ளவேண்டும் என உற்சாகப்படுத்தப்படுகிறோம்.

**இரண்டாவது விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்.** ஏன் விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என வேதம் சொல்லுகிறது? "மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான்" ஆகையால் விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்றார் (மத்.13:25). அநேகருடைய வாழ்க்கையில் களைகள் காணப்படுவதற்கு காரணம் இவைகள்தான். சத்துரு அந்த வேலையைச் செய்கிறான். எனவே நாம் விழித்திருக்க வேண்டியது அவசியம். "ஒரு மனுஷன் தன் வீட்டைவிட்டு, புறத்தேசத்துக்குப் பிரயாணம்போக எத்தனிக்கும்போது, தன் ஊழியக்காரருக்கு அதிகாரங்கொடுத்து, அவனவனுக்குத் தன் தன் வேலையையும் நியமித்து, விழித்திருக்கும்படிக்குக் காவல்காக்கிறவனுக்குக் கற்பிப்பான்" என மாற்.13:34-ல் வாசிக்கிறோம். ஏனெனில் எஜமான் இல்லாதநேரத்தில் திருடர்கள் கண்ணமிட்டு

திருடுவார்கள். ஆகையால் வேலைக்காரர்களைப் பார்த்து விழித்திருக்கும்படியாக அவர்களை எச்சரிப்பான். நாமும் கர்த்தருடைய வார்த்தையினாலே எச்சரிக்கப்படுகிறோம். நாம் விழித்திருந்து ஜெபிக்கவேண்டும். நாம் அயர்ந்து தூங்கும்போது சத்துரு அவிசுவாச களைகளை விதைப்பான். அவைகள் நமக்குள்ளாக வளரும்போது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை அது அழிவுக்கு நேரே கொண்டுசெல்லும். ஆதியிலே தேவனாகிய கர்த்தர் ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி அதில் ஆதிமனிதனைக் கொண்டுபோய் வைத்து, அதை அவன் பண்படுத்தவும் காக்கவும் செய்தார்.

இங்கே முதலாவது தன் வேலையை ஆரம்பித்தான் சத்துரு; களைகளை விதைக்கும்படியாக அவர்களிடம் சென்று விலக்கப்பட்ட அந்த தோட்டத்தில் உள்ள கனியை பறித்து புசிக்கும்படியாக ஆலோசனை கொடுத்தான். இவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுத்த ஆதாமும் ஏவாளும் பாவத்தின் கீழானார்கள். இன்றுவரை களைகளை சத்துரு தேவனுடைய ஜனங்கள் மத்தியில் விதைத்துக்கொண்டிருக்கிறான். ஆகையால் வேதம் திரும்பதிரும்ப விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என நம்மை எச்சரித்துக்கொண்டேயிருக்கிறது.

நெகேமியாவின் நாட்களில் சத்துருவின் வேலைகளை அறிந்த அவர்கள்; "நாங்கள் எங்கள் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி, அவர்கள் நிமித்தம் இரவும்பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தோம்" என்றார்கள் (நெகே.4:9). நாட்டை பாதுகாக்க எல்லைப்படைகளை ஒவ்வொரு நாடும் குவித்து வருகிறது. அவர்கள் இரவு பகலாக நாட்டை காத்து வருகிறார்கள். அதைப்போல ஒவ்வொரு சபையும் மூப்பர்களைக்கொண்டும் உதவிக்காரர்களைக் கெண்டும், பிரசங்கிமார்களைக் கொண்டும் பல ஊழியர்களைக் கொண்டும் காக்கப்படுகிறது.

அவரவர் அவரவருடைய வேலையில் கவனமாக இருந்து விழித்திருந்து காக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதில் ஒருவர் தவறும்பட்சத்தில் சத்துரு அவனுடைய வேலையை சுலபமாக முடித்திடுவான். ஒவ்வொருவரும் ஜாமங்காக்கிறவர்களைப்போல எப்பொழுது விடியும் என்று காத்திருப்பவர்களைப்போல காக்கவேண்டும்.

**மூன்றாவது தூங்காதபடி விழித்திருக்கவேண்டும்.** தூக்கம் ஒரு மனிதனுக்கு மிகவும் அவசியம். அதேவேளையில் விழித்திருக்கவேண்டிய நேரத்தில் தூங்கிக்கொண்டிருந்தால் அநேக நன்மைகளை இழக்கநேரிடும். தன் வீட்டெஜமான் வரும் வேளையை வேலைக்காரன் அறியாதிருக்கிறபடியால் அவன் மிகவும் ஆயத்தமாக இருக்கவேண்டுமல்லவா; "நீங்கள் நினையாதவேளையில் அவன் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள்" என மாற்.13;36 -ல் படிக்கிறோம்.

ஒருவேளை அவன் தூக்கிங்கொண்டிருந்தால் என்னவாகும்? அவனுடைய வேலைபோகும். வீட்டில் உள்ள பொருட்களை திருடர்கள் எடுத்துக்கொண்டுபோய் விடுவார்கள். வேலைக்காரன் தன்னுடைய எஜமானனுக்கு கணக்கு கொடுக்கவேண்டியவனாவான். ஒரு முறை ஆண்டவர் தம்முடைய சீஷர்களோடு ஜெபிக்கும்படியாக சென்றபோது; அவர்களை ஜெபிக்கும்படியாக சொல்லிவிட்டு சற்றுதூரம் சென்று அவர் பிதாவைநோக்கி ஜெபித்துக்கொண்டிருந்து பின்பு தம்முடைய சீஷர்களிடம் வந்தார். அவர்களோ அயர்ந்த நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். ஒரு மணிநேரமாவது என்னோடே கூட விழித்திருக்கக்கூடாதா என்றார். மீண்டும் சென்று விட்டு வரும்போது மீண்டும்

அவர்கள் தூங்கிக்கொண்டிருந்தார்கள். "அப்பொழுது, அவர்; என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்றார்" (மத்.26:38).

இந்த வசனத்தை சற்று கவனியுங்கள் என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது என்றார். ஆம் அன்பானவர்களே, இயேசுவின் கடைசி நேரம் அது. அவர் மிகவும் வியாகுலப்பட்டார். உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற வேளை நெருங்கிக்கொண்டிருக்கும்போது அவர் அந்த பாடுகளை நினைத்து மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டார். ஆகையால் தம்முடைய சீஷர்களை பார்த்து விழித்திருந்து ஜெபியுங்கள் என்றார். நமக்கு மிகவும் நெருக்கமான ஒருவர் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும்போது நாம் நித்திரை செய்துகொண்டிருப்போமா? நமக்கு நித்திரை வராது அல்லவா, அந்த நெருக்கமானவர்களோடு அவர்கள் படும் கஷ்டத்தில் நாமும் பங்குகொள்ளுவோமல்லவா? அந்தப்படியாக தம்மோடு விழித்திருந்து ஜெபிக்கும்படியாக கேட்டுக்கொண்டார்.

மத்.25:5 வசனத்தில் பத்துகன்னிகளைப் பற்றிப்படிக்கிறோம். "மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்". இந்த பத்துப்பேரும் மணவாளனுக்கு எதிர்கொண்டுபோக ஆயத்தமாக வந்தவர்கள்தான். ஆனால் ஐந்துபேர் இதில் புத்தியுள்ளவர்களாக இருந்தார்கள் மற்ற ஐந்துபேர் புத்தியற்றவர்களாக இருந்தார்கள். அவர்கள் எண்ணெய்யை எடுத்துக்கொண்டுபோகவில்லை. மணவாளன் வருகிறார் என்ற சத்தம்கேட்டவுடன் புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவிட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். புத்தியில்லாதவர்கள் எண்ணெய்யை கேட்டபோது அவர்களை கடைகளுக்கு சென்று வாங்கும்படி ஆலோசனை சொன்னார்கள்.

மணவாளன் வந்தபோது ஆயத்தமாயிருந்த ஐந்து கன்னிகைகள் அவரோடேகூட கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். இங்கே தூங்கினவர்கள் தங்களுடைய பணியை சரியாக செய்யமுடியாது போனார்கள். மேலும் ஆயத்தமில்லாதவர்களாகவும் இருந்திருக்கிறார்கள் ஆகையால் அவர்கள் மணவாளனோடு சேர்ந்து போகமுடியவில்லை. நம்முடைய வாழ்க்கையிலும் நாம் விழித்திருந்து ஜெபிக்காவிட்டால் அநேக ஆசீர்வாதங்களை இழந்துவிடுவோம். எனவே விழித்திருந்து ஆயத்தமாயிருங்கள்.

## கேள்வி நேரம்

**கர்த்தருடைய சமுகத்திலே காத்திருக்கிற மனுஷன் எப்படிப்பட்டவன்?**

"என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்குச் செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான்" (நீதி.8:34). ஆம், ஆண்டவருடைய சமுகத்தில் நித்தம் விழித்திருந்து காத்திருக்க வேண்டும். இன்று என்னை முற்றிலும் வழிநடத்தும் என்று முழுவதுமாக ஒப்புக் கொடுத்து ஜீவிக்கும்போது, கர்த்தர் அற்புதவிதமாக ஒவ்வொரு நாளும் வழிநடத்துவார்.

அவருடைய ஆலோசனைக்குச் செவிகொடுக்கவேண்டும். வேதம் சொல்லுகிறபடியான வாழ்க்கையை வாழ்ந்து காட்டவேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்கு செவி கொடுத்தவர்கள் கணக்கில்லாமல் ஆசீர்வதிக்கப்பட்டனர் என்று நாம் வேதத்தில் படிக்கிறோம். அவ்விதமாக நீங்களும் ஆசீர்வாதிக்கப்பட உங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



# நாம் ஏன் ஆராதிப்பதற்குக் கூடுகிறோம்?

## Why We Meet For Worship?

J.C.Choate

நாம் கிறிஸ்தவராயிருப்பதினாலும், கிறிஸ்துவின் சபை கூட்டத்தாரா யிருப்பதினாலும் தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காக வாரத்தின் முதல்நாள் தோறும் கூடுகிறோம். நாம் இவ்வாறு செய்வதற்கு பல காரணங்கள் உண்டு.

இக்காரணங்களை ஆராய்வதற்கு, ஒரே தேவனும், நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் பிதாவும் உண்டு என்று நாம் அறியவேண்டியது அவசியம். அவர் நமது சிருஷ்டிகரும் நாம் பெற்றிருக்கிற எல்லா ஆசீர்வாதங்களையும் அருளிச் செய்தவருமாயிருக்கிறார். அவருடைய அன்பினிமித்தம், அவருடைய குமாரனாகிய இயேசுவை உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரிக்கும்படி அனுப்பி, நாம் இரட்சிக்கப்படும் பொருட்டு தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் அவர் நமக்காக இதை ஏற்படுத்தியிருக்கிறார். நாம் அவருடைய பிள்ளைகளாக இருக்கின்றபடியினால், அவருக்காக ஜீவிக்கவும், அவரை சேவிக்கவும், அவர் வழிநடத்துகிறபடி அவரை ஆராதிக்கவும் விரும்புகிறோம். கிறிஸ்து, ‘‘தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்’’ (யோவா.4:24). நாம் சேவிக்கிற தேவன் ஒரு மனிதனல்ல, ஒரு மிருகமல்ல, அல்லது ஒரு உயிரற்ற பொருளல்ல. அவர் சூரியனுக்கோ, சந்திரனுக்கோ அல்லது நட்சத்திரங்களுக்கோ, ஒரு நதிக்கோ, ஒரு மலைக்கோ அல்லது ஒரு மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு விக்கிரகத்திற்கோ ஒப்பானவரல்ல. அவர் ஆவியாயிருக்கிறார், சகலத்தையும் உண்டாக்கியவர், வாழ்வில் ஆதரிக்கிறவரும், அழிவில்லாமலிருக்கச் செய்கிறவருமாயிருக்கிறார். மதிகேடன் மட்டுமே அவர் இல்லையென்று சொல்லுவான் (சங்.14:10).

நாம் பங்குகொள்ளுகிற தொழுகையில் பரலோகத்தின் தேவனுக்கு நேராக ஏறெடுக்கப்படுகின்ற ஆராதனை, துதி மற்றும் கனம் போன்றவைகள் சம்பந்தப்பட்டுள்ளன. நம்முடைய தொழுகை ஆவியினால் செய்யப்படுகிறது. அதாவது, நாம் இதை எல்லா உண்மையோடும், தாழ்மையோடும், நாம் செய்கின்ற தொழுகையில் முழு கவனம் கொண்டிருப்பவர்களாகவும் இருக்கிறோம்.

நாம் உண்மையோடும் நம்முடைய தொழுகையைச் செய்கிறோம். அதன் பொருள், சத்தியத்தின்படி அல்லது தேவன் தம்முடைய வார்த்தையில் கூறியிருக்கிறபடி நாம் தேவனைத் தொழுது கொள்ளுகிறோம் என்பதாகும். நாம் தொழுதுகொள்ளுகிற தேவன் ஒருவரே, மேலும் நாம் நம்மைப் பிரியப்படுத்துவதற்குப் பதிலாக தேவனைப் பிரியப்படுத்த விரும்புகிறோம்.

அதன் பொருள், நாம் மனுஷருடைய கோட்பாடுகளின்படியும் கட்டளைகளின்படியும் தேவனை தொழுதுகொள்ளுகிறவர்களாய் இல்லை (மத்.15:9). நீங்கள் அறியாமல் அவரைத் தொழுதுகொண்டால், அவர் பிரியப்படுத்தப்பட்டாலும் அல்லது நாம் எப்படித் தொழுதுகொள்கிறோம் என்பது ஒரு பெரியகாரியமில்லையென நாம் காலமெல்லாம் நேர்மையாகவும் உண்மையாகவும் இருக்கிறோம் என நாம் காரணம் காட்டினாலும் அதனால்

ஒன்றுமில்லை. இது நாம் தொழுதுகொள்ளுகிற விதத்தில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது இல்லாவிட்டால் தேவன் இந்தக் காரியத்தில் அவர் பேசியிருக்கமாட்டார்.

வேதாகமம் போதிக்கின்றபடி வாரத்தின் முதல்நாள் தோறும் கிறிஸ்தவர்களாகிய நாம் கூடி ஆராதிக்க வேண்டியவர்களா யிருக்கிறோம். இதற்கான திருஷ்டாந்தத்தை அப்போஸ்தலர்20:7-ல் நாம் பெற்றிருக்கிறோம். நாம், "வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" என நாம் வாசிக்கிறோம். பழைய ஏற்பாடு சட்டத்தின் கீழ், ஏழாம் நாள் ஆராதனைக்குரிய நாளாயிருந்தது, ஆனால் கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து தம்முடைய சொந்தக்கட்டளையினால் அதை மாற்றிப் போட்டார் (கொலோ.2:14). அந்த பழைய கட்டளையை எடுத்துப்போட்டதின் மூலம் ஆராதனைக்குரிய நாளாயிருந்த ஏழாம் நாளும் எடுத்துப் போடப்பட்டது. கிறிஸ்து கல்லறையிலிருந்து வாரத்தின் முதல் நாளிலே உயிர்த்தெழுந்தார் என வாசிக்கிறோம் (28:1-6). அதைப்போல சுவிசேஷமும் வாரத்தின் முதல்நாளிலே முதல்முறையாகப் பிரசங்கிக்கப்பட்டு, அதே நாளில் சபையானது தன்னுடைய ஆரம்பத்தைப் பெற்றது (அப்.2). முடிவாக, பவுல் கொரிந்து பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்களுக்கு, அவர்கள் வாரத்தின் முதல்நாள்தோறும் தங்களுடைய வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கும்படிக்கு அவர்களுக்கு எழுதினார். ஆனால் சில கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள்தோறும் கூடிவரும்படி எந்த ஒரு இடத்திலும் சொல்லப்படவில்லை எனச் சொல்லலாம். பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழிருந்த மக்கள் ஒவ்வொரு ஏழாம்நாளையும் அனுசரிக்கவேண்டுமென அவர்களுக்கு தேவன் சொல்லவில்லை. உண்மையென்னவென்றால், ஒவ்வொரு வாரத்திலும் வாரத்தின் முதல்நாள் உண்டு, வாரத்தின் முதல் நாள் கர்த்தருடைய நாளாயிருக்குமானால், ஆராதனைக்குரியநாளாயிருக்குமானால் பிறகு கிறிஸ்தவர்கள் இதன் நோக்கத்திற்காக வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவரவேண்டியவர் களாயிருக்கிறார்கள்.

எபிரெய ஆசிரியர் நாம் சபைகூடிவருதலை விட்டுவிடக்கூடாதென்கிறார். அவர் கூறுவதைக் கேளுங்கள், அவர் கூறுகிறபடி, "அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்" (எபி.10:23-27). நாம் ஒருவருக்கொருவர் சபை

கூடிவருதலை விட்டுவிடாதிருக்க வேண்டுமென அவர் கூறுவதை தயவு செய்து கவனியுங்கள். அவர் எதைக்குறித்து பேசிக்கொண்டிருக்கிறார்? அல்லது, நாம் விட்டு விடாதபடிக்கு ஒழுங்கின் அடிப்படையில் நாம் கொண்டுள்ள சபை எது? அவர், சிலர் அதை விட்டு விலகிக்கொண்டிருந்தார்களென சொன்னார், ஆனால் அவர்கள் செய்தது போல நாம் செய்யக்கூடாது. மாறாக, நாம் ஒருவரை ஒருவர் கவனித்து, அல்லது ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்தி, நாளானது சமீபித்து வருகிறதைப் பார்த்து சபை கூடிவரவேண்டுமெனச் சொல்கிறார். ஆனால் நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்திருந்த போதிலும்கூட தொடர்ந்து மனதார நாம் பாவஞ்செய்வோமானால் நாம் தொடர்ந்து நம்முடைய பாவத்தில் நிலைத்திருக்கையில் கர்த்தர் நம்மைக் காப்பாற்றமுடியாதென்று சொல்ல அவர் துரிதப்படுகிறார். ஆனபடியினால் நாம் தேவனுடைய சித்தத்தை அறிகிறது என்பது மட்டுமல்ல ஆனால் சபைக்கூடிவருவதில் இணைந்திருக்கிறதான அவருடைய சித்தத்திற்கு நாம் கீழ்ப்படிவது என்பதும் முக்கியமானதாகும்.

இப்பொழுது தேவனுக்கு ஆராதனை ஏறெடுக்கையில் வாரத்தின் முதல் நாள்தோறும் நாம் என்னசெய்யவேண்டியவர்களாயிருக்கிறோம்? வேதவாக்கியத்தில் பல காரியங்கள் பட்டியலிடப்பட்டுள்ளது. அப்போஸ்தலர்20:7-ல் குறிப்பிட்டுள்ளபடி, கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்கும்படிக்கு அல்லது கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும்படிக்குக் கூடினார்கள். கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல், “நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து; இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் காத்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து; இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்” (1கொரி.11:23-29). கிறிஸ்துவின் சரீரத்தை நினைவுகூரும்படி அப்பம் பிட்கப்பட வேண்டியிருந்தது, கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவுகூரும்படி பானம் பண்ணப்படவேண்டியிருந்தது என பவுல் சொன்னதை தயவுசெய்து கவனியுங்கள். வேறுவார்த்தைகளில் கூறுவோமென்றால், கர்த்தர் தம்முடைய ஜனங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு கிரயமாக செலுத்தப்பட்டதை தம்முடைய ஜனங்கள் தொடர்ந்து நினைவுகூரும்படி விரும்புகிறார். கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும்போது கிறிஸ்தவர்கள் மீண்டும் சிலுவையை நோக்கிப் பார்க்கிறார்கள்.

இதைச் செய்யும்போது அவர்கள் கிறிஸ்து மீண்டும் வருவார் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்கள். எனவே கர்த்தருடைய பந்திமிகவும் முக்கியமானதாகும். இது ஆவிக்குரியவகையில் கர்த்தருக்கு முன்பாக தான் எந்நிலையில் இருக்கிறோமென தன்னுடைய சொந்த வாழ்க்கையை சீர் தூக்கிப்பார்ப்பதற்கான ஒரு தருணமாயிருக்கிறது. இவ்வாறே இது கிறிஸ்துவைக் குறித்த சில மதிப்புமிக்க பாடங்களை உலகத்திற்கு உபதேசிக்கும் வாய்ப்போடேகூட கிறிஸ்தவர்களை வரவேற்கிறது.

அடுத்ததாக, கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாள்தோறும் ஆராதிக்கும்படிக்கு கூடிவரவேண்டியவர்களாயிருக்கின்றனர். மேலும் அவ்வாறு அவர்கள் செய்கையில் சேமித்துவைக்க அல்லது தன்தன் வரவுக்குத் தக்கதை கர்த்தருடைய ஊழியத்திற்கென்று அவருக்குக் கொடுக்க வேண்டியவர்களா யிருக்கின்றனர். பவுல், "பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக் குறித்து, நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" (1கொரி.16:1,2) என்றான். 2கொரிந்தியர்9:6,7-ல் பவுல், "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான் அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க்கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" என எழுதினார். நிச்சயமாக வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று இயேசு சொன்னார் (அப்.20:35). பழைய கட்டளையின்கீழ் கர்த்தருடைய ஜனங்கள் தசமபாகம் அல்லது தங்களுடைய வருமானத்தில் 10-ல் ஒரு பகுதியினை கொடுக்க கட்டளையிடப்பட்டிருந்தனர், ஆனால் அந்த கட்டளை தொடர்ந்து நிலைநிற்கவில்லை. கிறிஸ்தவர்களாகிய நாம், நாம் பெற்றிருக்கிற செழுமைக்கேற்ப கொடுக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். அது எவ்வளவு? சந்தேகமேயில்லை, அது பத்தில் ஒரு பகுதியை விட அதிகம். நிச்சயமாகவே நாம் கிறிஸ்துவுக்கு முன் வாழ்ந்துவந்தவர்களைக் காட்டிலும் அதிகமான ஆசீர்வாதங்களையும் வாக்குத்தத்தங்களையும் பெற்றிருக்கிறோம்.

நாம் தேவனை துதிப்பாடல்களினால் பாடி கீர்த்தனம்பண்ணும்படிக்கு வாரத்தின் முதல்நாள்தோறும் கூடிவரவேண்டிவர்களாயிருக்கிறோம். எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு பவுல், "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம்பண்ணி" (எபே.5:19) என்றார். கொலோசெயர்3:16,17-ல் பவுல், "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பக்தியுடன்பாடி; வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை

ஸ்தோத்திரியுங்கள்" என பிரகடனப்படுத்தினான். இந்த வசனங்களிலும் மற்ற பகுதிகளிலும் நீங்கள் காண்கையில், தேவனைத் துதித்து பாடுவதை முக்கியப்படுத்துகிறது. எபிரெய ஆசிரியர் நாம் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை கர்த்தருக்கு ஏறெடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் (எபி.13:15) என்கிறார். கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் ஆராதனையில் வாத்தியக் கருவி இசையை பயன்படுத்தக்கூடாது. ஆனால் ஆராதனையில் வாத்தியக்கருவி இசையினைப் பயன்படுத்துவதால் தவறு என்ன? இது குறித்த நன்மை என்ன? வெறுமனே பாடுவது மூலம் தேவனை ஆராதிக்க முடியாதா? நம்மால் முடியுமென நீங்கள் அறிவீர்கள். ஆனபடியினால், வேதவாக்கியங்கள் தெளிவாக போதிக்கிறபடி நாம் பாடக்கடவோம். இதற்குமேல் சொல்லும்போது அது கர்த்தருடைய வெறுப்பை சம்பாதிக்க வேண்டியிருக்கும்.

கடைசியாக, கிறிஸ்தவர்களாகிய நாம் வாரத்தின் முதல்நாள்தோறும் தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் நம்முடன் பேச அனுமதிக்கும்படி ஆராதிக்கிறவர்களாயிருக்கிறோம், மேலும் அத்தோடுகூட நாமும் நம்முடைய ஜெபத்தின் மூலம் தேவனோடு பேசுகிறவர்களாயிருக்கிறோம். நாம் 2தீமோத்தேயு2:15-ஐ வாசிக்கும்படி உற்சாகப்படுத்தப்படுகிறோம். கிறிஸ்து நாம் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படி கேட்டுக்கொண்டார் (யோவா.5:39). ஆதிக்கிறிஸ்தவர்கள் "அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந் நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப்.2:42). நாம் வேத ஆராய்ச்சியில்லாமலும், ஜெபமில்லாமலும் எவ்வாறு அநேகமாக ஆராதிக்க முடியும்?

நீங்கள் தேவனை ஆராதிக்கிறீர்களா? நீங்கள் முறைப்படி ஆராதிக்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? நீங்கள் கிறிஸ்தவரல்லவென்றால், நீங்கள் தேவனோடு ஒரு சரியான உறவில் இல்லை ஆகவே நீங்கள் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க வகையில் அவரை ஆராதிக்க வேண்டும். நீங்கள் கிறிஸ்தவராக மாறும்படி நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். கிறிஸ்து, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (மாற்.16:16) என்றார். நீங்கள் அதைச் செய்தால், கிறிஸ்து உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார் (அப்.2:47). அதன்பின் நீங்கள் தொழுது கொள்ளமுடியும்.

■ எவரெஸ்ட் சிகரத்தில் 29 வது முறையாக ஏறி, நேபாள மலையேற்ற வீரர் காமி ரிதா புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார்.

■ புயல் என்ற வார்த்தையானது, கிரேக்க வார்த்தையான சைக்ளோஸ் என்பதிலிருந்து உருவானது ஆகும்.

■ 9 ஆண்டுகள் ராணுவத்தில் பணியாற்றிய நாய் மேருவை கௌரவிக்கும் விதமாக ரயிலில் முதல் வகுப்பில் அதற்கு பெர்த் ஏற்பாடு செய்தது ராணுவம்.

நடப்புச் செய்திகள்

நன்றி - NewsPoint

**ஜெபியுங்கள்**

- இம்மாதம் நம் மாத இதழ் முதன் முதல் துவக்கப்பட்ட மாதம் ஆகும். 1992 ல் ஆகஸ்ட் மாதம்
  தேவ கிருபையால் துவங்கப்பட்டது தேவனுக்கு நன்றி சொல்லி...
- 365 யூடிப் நிகழ்ச்சிகளை அப்லோடு செய்ய தேவன் கொடுத்த பெலத்திற்காக...
- இந்தியாவில் ஊழியம் செய்யும் சுவிசேஷகர்களுக்காக...



ப.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

47



# பரிசுத்த வேதாகமத்தில் எரேமியா
# Jeremiah In The Holy Bible

1. பென்யமீன் கோத்திரத்தான், இல்க்கியாவின் குமாரன் - எரே.1:1
2. கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே இவனை தீர்க்கதரிசியாக தெரிந்துகொண்டார் - எரே.1:5
3. என் ஜனங்கள் இரண்டு தீமைகளை செய்தார்கள் - எரே.2:13
4. புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளாது இருங்கள் என்று சொன்னவன் - எரே.10:2
5. நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப்பண்ணினால் குதிரைகளோடு எப்படி சேர்ந்து ஓடுவாய் என்றவன் - எரே.12:5
6. உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடன் உட்கொண்டேன் என்றவன் - எரே.15:16
7. இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் அவருடைய உடன்படிக்கை - எரே.31:31
8. எரேமியாவை தண்ணீர் இல்லாத துரவிலே இறக்கிவிட்டார்கள் - எரே.38:6
9. இயேசுவின் பிறப்பின்போது நிறைவேறிய எரேமியாவின் தீர்க்கதரிசனம் - எரே.31:15
10. கர்த்தர் நல்லவர் என்றுரைத்தான் - புல.3:25

### இந்தப் பாடத்திற்கான கேள்வி:

**ஒரு நிமிஷத்திலே கவிழ்க்கப்பட்ட எதின் பாவத்துக்கு வந்த தண்டனையைப் பார்க்கிலும் என் ஜனமாகிய குமாரத்தியின் அக்கிரமத்திற்கு வந்த தண்டனை பெரிதாயிருக்கிறது?**



**விடை:** சோதோம் - (புலம்பல் 4:6).

பு.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

48



### பரிசுத்த வேதாகமத்தில் யாக்கோபு
### James In The Holy Bible

1. கர்த்தருடைய சகோதரன், யோசே, சீமோன், யூதா இவன் சகோதரர்கள் - மத்.13:55
2. எருசலேம் சபையில் முக்கியமானவர்களில் ஒருவன் - அப்.15:13
3. யாக்கோபு புத்தகத்தை எழுதினவன்
4. பன்னிரெண்டு கோத்திரப்பிதாக்களுக்கு எழுதப்பட்ட பொதுவான நிருபம் - யாக்.1:1
5. சோதனையை சகிக்க இவனுடைய ஆலோசனை - யாக்.1:12
6. நாவை அடக்கவேண்டும் - யாக்.1:26
7. பரத்திலிருந்து வரும் ஞானம் - யாக்.3:17
8. தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள் - யாக்.4:7
9. நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாது - யாக்.4:14
10. கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள் - யாக்.5:7

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

**இயேசு உயிர்த்தெழுந்த பின்பு யாக்கோபுக்கு தரிசனமானாரா?**

**விடை:** ஆம் - "பின்பு யாக்கோபுக்கும், அதன்பின்பு அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார்" (1கொரிந்தியர் 15:7).



பெண்கள் பகுதி



# நான் குற்றத்தை ஒப்புக்கொள்ளமாட்டேன்

I Won`t Apoligize

-Betty

ஒருவன் சச்சரவுகளில் அநீதியான வழியைச் சார்ந்திருக்கின்ற அல்லது மற்றவர்கள் மீது கெட்ட நடவடிக்கைகளைக் காண்பிக்கின்ற வேளையில் குற்றத்தை ஒத்துக்கொள்ள மறுத்தல்- 'மனித' இயல்பாக இருக்கலாம். அல்லது இது ''குற்றத்தை ஒப்புக் கொள்ளுவதின் மூலம் நான் குற்றவாளியாய் இருக்கிறேன் என நான் ஒத்துக்கொள்ளாவிட்டால், அப்புறம் இது மற்ற மனிதனுக்கு பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வழி ஏற்படும்'' என்ற மனநிலை வளர்ந்து கொண்டேயிருக்கலாம்.

முகத்தோற்றத்தையும் இருதயத்தையும் தெளிவுபடுத்தாதிருக்கும் எந்த அடிப்படைக் காரணமும், 'என்னை மன்னித்துவிடு' என்ற எளிய வார்த்தைகள் சண்டை நேரத்தினை முறியடிக்கும் நல்ல விளைவாக இருக்கிறது.

மனிதர்கள் வித்தியாசமான கோணத்தில் ஒருவருக்கொருவர் மிகப்பெரிய வேறுபாட்டுடன் இருக்கின்றனர். வழக்கமாக ஒரு நிச்சயிக்கப்பட்டவற்றிலிருந்து காரணமில்லா விரோதநோக்குடைய கருத்தினை மற்றவற்றில் அல்ல நம்முடைய சுய காரியங்களில் காண்கின்றோம். கணவனும் மனைவியும் அந்நியர் மத்தியில் அல்லது வேலை செய்யும் அலுவலகத்தில் வழக்கமாக காணப்படாத நாகரிகமற்ற பிரச்சனைகளை அடிக்கடி சந்திக்கின்றனர். கணவனும் மனைவியும் நாளுக்கு நாள் தங்களுடைய கஷ்டங்கள், சோர்வுகள், சவால்கள், ஏமாற்றங்கள் அடிக்கடி வார்த்தைகளாக வெடிக்கின்றன. மனநிலைகள் வெளிப்படுத்தப்படுகின்றன, வார்த்தைகள் அள்ளி வீசப்படுகின்றன, வேதனைகள் பாரமாக்கப்படுகின்றன, கண்ணீர்கள் சிந்தப்படுகின்றன யாரோ ஒருவர் தவறிழைத்து விட்டார்.

ஆனால் யார் தன் குற்றத்தை ஒத்துக்கொள்ளுவார்? ஒருவேளை யாரும் நேர்மையுடன், உணர்வடைந்து 'நான் தவறிழைத்து விட்டேன் நான் அதைச் சொல்லியிருக்கக்கூடாது' என தம்மை நிதானித்துப் பார்க்கமாட்டார்கள். பதிலாக, ஒரு குளிர்ச்சியான மௌனம் ஒரு வேளை சச்சரவினை முடிவுக்குக் கொண்டு வரும், பின்பு இருவரும் தங்களுடைய சொந்த வேலைக்குத் திரும்புவார்கள். நேரங்கள் கடந்து செல்லும், குளிர்ந்தநிலை இருவருடைய இருதயத்திற்குள் ஆழம் ஆழமாக சென்று முடிவை உண்டாக்கும். ஒரு வேளை அடுத்தநாள், அல்லது அதற்கடுத்த நாள், காரியங்கள் ஒரு வழியாக மறுபடியும் சீராகக் காணப்படும். உரையாடல் பழைய நிலையைக் கொண்டுவரும். வாழ்க்கை தொடர ஆரம்பிக்கும்.

ஆனால் இருவருடைய இருதயங்களில் என்ன நடந்திருக்கின்றது? காயங்கள் உண்டாக்கப்பட்டது, பாதுகாப்பிற்கென்று கடினமான உணர்ச்சியற்ற நிலை உருவாக்கப்பட்டது. சுகமாக்கும் நிவாரணி உபயோகிக்கப்படவில்லை, எனவே நிரந்தர வடுக்கள் ஏற்பட்டுள்ளன. கடினமான உணர்ச்சியற்ற நிலையிலும், வடுக்களின் அடியிலும் புதைக்கப்பட்டவைகள் கோபம், மனக்காயம், மனக்கசப்பு போன்றவைகள் ஒரு வளருகின்ற ஒரு வேராக இருக்கின்றது.

அடுத்த முறை கோபம் வெளிப்படுகிறது, இது முந்தின சண்டையில் கொழுந்துவிட்டு எரிகின்றவையான கசப்பின் அடுக்கினை ஒளிவிடச்செய்கிறது- மேலும் அதற்கு மேல் ஒரு அடுக்கு, மேலும் அதற்கு மேல் ஒரு அடுக்கு, மேலும் அதற்கு மேல் ஒரு அடுக்கு ...

எனவே திரி அணைகிறது, கோபம் அதிவேகமாக வெடிக்கிறது, கசப்பு மிகக் கசப்பாகின்றது- சண்டை மிக மோசமாகின்றது. கணவனும், மனைவியும் சண்டையிட்டுக்கொண்டிராதிருந்தாலும் கூட எப்பொழுது அவர்களுக்கிடையே

ஒருவருக்கொருவர் மனக்கசப்பில் வளருவார்கள்? இருவருக்கிடையே ஒருவர் இன்னொருவரை விட மிகச்சிறந்தவராக எப்பொழுது நினைப்பார்கள்? இவைகளெல்லாம் திருமண வாழ்விற்குள் அல்லது விவாகரத்தின் முடிவில் பேதத்தினால் ஏற்படும் விளைவாகிய இவைகளெல்லாம் அடிப்படை பிரச்சனைகளாக இருக்கின்றன.

கணவன் மனைவி இருவரும் திரும்பிச் சென்று குற்றத்தை ஒப்புக்கொள்ளமாட்டேன் என்ற தங்களுடைய தீர்மானத்தைக் குறித்து மறு யோசனை செய்ய வேண்டியது அவசியம். 'என்னை மன்னித்துக் கொள்'- எப்பேர்பட்ட எளிய வார்த்தைகள், சொல்லுவதற்கு மிக சுலபமானது, மிகவும் சத்திவாய்ந்தது! 'என்னை மன்னித்துக்கொள்' என்று நேர்மையுடன் கூறுவது என்ன விளைவை ஏற்படுத்துகிறது? முதலாவது, இது நேர்மையுடையதாக இருக்குமானால், இது ஒருவருடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கின்ற மற்றும் ஒருவர் ஒரு சார்புடையவராக அல்லது இருவர் மேலும் குற்றம் உண்டு எனவும் தீர்மானிக்கின்ற முடிவினை கொண்டுவரும். தவறை ஒப்புக்கொள்ளுகின்ற செயல் தவறான பெருமையை அழித்து, தாழ்மையான மனநிலையினை உருவாக்கும். தன் குற்றத்திற்காக மனவருந்தும் இந்த மனநிலையுடனும், குற்றத்தை ஒத்துக்கொள்ளக்கூடிய இந்த வலி நிவாரணியுடனும், இருவருடைய இருதயங்களில் குணமாக்கும் செயல் ஆரம்பிக்கும். மனக்கடினத்தின் அடுக்குகள் மற்றும் மனக்கசப்பினால் குமுறிக்கொண்டிருக்கும் ஜுவாலையும் உருகிப் போய்விடும், மேலும் கடந்த காலத்தின் பிரச்சனைகளின்றி உள்ளான சமாதானத்தின் உணர்வுகளால் நாளுக்கு நாள் நல் உறவு முன்னேற்றமடைந்து கொண்டே செல்லும்.

எபேசியர் 4:26-ல், ஆவியின் தூண்டுதலினால் பவுல் இவ்வார்த்தைகளை எழுதினார், "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது". இந்த வார்த்தைகளின் பொருள் என்ன? முதலாவது, கிறிஸ்தவர்கள் ஒருபோதும் கோபங் கொள்ளக் கூடாது என அவர் கூறவில்லை, அல்லது கோபங்கொள்ளுவது பாவம் என்றும் கூறவில்லை. இவ்வுலகில் தவறான காரியங்கள் பல இருக்கின்றன, மேலும் அவைகளின் மேல் கோபங்கொள்ளுவது நீதியுள்ளதும் சரியானதுமாக இருக்கிறது. ஆனால் பவுல் சொன்னார், "உங்களுடைய கோபம் பாவஞ்செய்வதற்கு இடங்கொடாதீர்கள்!" அது முழுவதும் வித்தியாசமானது. மேலும் அதிகமான ஜனங்கள் செய்யக்கூடியதும் அதுவே!

நான் ஒரு கணவனுக்குரிய நிலையினை, மனைவியினிடத்தில் கண்டிப்பு மற்றும் முன்கோபத்துடன் நடந்துகொண்ட அவளுடைய கணவனிடத்தில் கண்டிருக்கிறேன். இயற்கையான பதில் மனைவியினுடைய பங்கிலும் அதே கண்டிப்பான ஜுவாலையினை அதிகமாக தூண்டிவிட்டதைப் போல் இருந்திருக்கும். மாறாக அவள் நீதிமொழிகள்15:1-ல் சாலொமோனால் பேசப்பட்டது போல நடந்து கொண்டாள்: "மெதுவான பிரதியுத்திரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்". பிரதியுத்திரமாக, அவள் அவர்களுக்கிடையே கோபத்தினை சகஜநிலைக்கு மாற்றிவிட்டாள், ஏனென்றால் அவள் தன் கணவன் நியாயமாக யோக்கியத்துடன் நடந்து கொண்டது போல அவள் அவனுக்குப் பதிலளிக்கவில்லை. ஆம், அதுவே பொறுமையோடு பதிலளித்தல், மற்றும் சமாதானத்தை நாடுதல் போன்றவை கோபத்தில் சவுக்கடி கொடுப்பதைக் காட்டிலும் பிரச்சனைகளை விலக்குவதற்கு ஒரு திறவுகோலாயிருக்கிறது. பவுலுடைய எச்சரிப்பின் இரண்டாவது பாகம் நாம், 'சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்பாகவே நம் எரிச்சல் தணியவேண்டும்" என்பதாகும். நீங்கள் கோபமனதுடனே உங்கள் படுக்கைக்குச் சென்றால், நீங்கள் விழித்தெழும்போது நீங்கள் இன்னும் மோசமான உணர்வடைந்ததை எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? எனவே தான் வெகு நீண்ட நாட்களுக்கு மேலாக நமக்குள் கோபம் குடிகொண்டிருக்க அனுமதிக்கக் கூடாது என வெளிப்படையாகவே நாம் எச்சரிக்கப்படுகிறோம். இது அழித்து விடும்.

பெண்கள் பகுதி

# ஒரு சிறிய ஊசியினால்...

## With a Small Needle...

J.GloryArjunan



'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்பது தமிழ் பழமொழி. உண்மைதான்! தங்களிலிருந்த சிறிய காரியங்களைக் கொண்டு பெரிய காரியங்கள் நடைபெற காரணமாயிருந்த அநேக சகோதரிகளை நம்முடைய வேதாகமம் நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. அநேகர் தங்களிடமிருந்த கொஞ்சப் பொருளை தேவ சித்தம் நிறைவேற பயன்படுத்தி பெரிய ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கின்றனர். அப்போஸ்தலர்9:36-ல் ஒரு அருமையான சகோதரியை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. இந்த ஸ்திரீ தன்னுடைய சிறிய ஊசியினால் பெரிய காரியத்தை தேவநாம மகிமைக்காக செய்தவள் என வேத வல்லுநர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இவள் பெயர் தொற்காள். யோப்பா பட்டணத்தில் வாழ்ந்து வந்த ஒரு சீஷி. இயேசுவுக்கு சீஷிகள் அநேகர் இருந்தனர். தங்களுடைய ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்து வந்த யோவன்னாள், சூசன்னாள் போன்றவர்களைப் பற்றி நாம் அறிவோம். இவர்களைப் போல இந்த தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் சீஷியாக இருந்துகொண்டு இயேசுவின் குணாதிசயங்களை வெளிப்படுத்தி வந்தாள்.

தபீத்தாள் என்றால் 'Gazelle' என்று பொருள். இந்த 'Gazelle' என்ற ஆங்கில வார்த்தைக்கு 'வேகமாக ஓடக்கூடிய ஒருவகை அராபிய மான்' என அகராதி விளக்கமளிக்கிறது. நம்மில் அநேகர் அதனுடைய சாந்தமுள்ள கண்கள், மெல்லிய ஒல்லியான கால்கள், அதனுடைய வசீகரமான மற்றும் வேகமான ஓட்டம் போன்றவற்றையெல்லாம் ரசிக்கின்றோம். இந்த அர்த்தமுடைய பெயரை தரித்திருந்த இந்த தபீத்தாள் மான்களுக்குரிய இந்த குணாதிசயங்களில் ஏதேனும் ஒன்றினைப் பெற்றிருந்தாளா? அவளைக் குறித்து வேதம் '...அவள் நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாய் செய்துகொண்டு வந்தாள்' எனக் கூறுகிறது (வச.36). இவள் விதவைகளையும் அவர்களுடைய பிள்ளைகளையும் ஆதரித்து அவர்களுக்கு உதவி செய்துகொண்டு வந்திருக்கிறாள். அப்படியானால் இவளுக்கு குடும்பமிருந்ததா? இவள் திருமணமானவளா? இவளுக்குப் பிள்ளைகளிருந்தார்களா? இவள் வயது சென்றவளா? இதைப்பற்றியெல்லாம் வேதம் நமக்குத் தெளிவுபடுத்தவில்லை. ஆனால் இவள் இயற்கையான மரணம் எய்யவில்லை. இவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள் என வேதம் கூறுகிறது (வச.37). எனவே அவள் தன் இளம்வயதில் மரித்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அவள் மரணமடைந்தபின் அவளுடைய மகிமை வெளிப்படுகிறதை பின்னுள்ள வசனங்களின் மூலம் அறிந்துகொள்ளலாம். "...விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து..." (வச.39) என வாசிக்கிறோம். இவளுடைய வாழ்விலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?

**1. தொற்காள் தன்னுடைய தாலந்தை தேவனுக்காகப் பயன்படுத்தினாள்:**

தன்னுடைய சிறிய ஊசியினால் அங்கிகளையும், வஸ்திரங்களையும் பின்னி விதவைகளுக்கும் எளியவர்களுக்கும் அவைகளைக் கொடுத்து உதவிசெய்திருக்கிறாள். தன்னைச் சுற்றியிருந்த ஜனங்களுக்கு உதவிசெய்திருக்கிறாள். பவுல் கொலோசெயருக்கு, "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக்

கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" (கொலோ.3:23,24) என்று எழுதினார். இந்த தபீத்தாள் ஒரு சீஷியாக இருந்தாளென நாம் வாசித்தோம். எனவே பவுல் கூறியதைப்போல கிறிஸ்துவுக்கு சீஷியாக இருந்ததினிமித்தம் சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவோமென்று அறிந்து கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய் செய்திருக்கிறாள். ஆம், அன்பான சகோதரிகளே, இவள் ஜீவியம் நமக்கு சிறந்த எடுத்துக்காட்டல்லவா? இயேசுவுக்கு சீஷியாகமாறின நீங்களும் நானும் இந்த சிந்தனையுள்ளவர் களாயிருக்கிறோமா? வரப்போகிற சுதந்தரமாகிய பலனை எண்ணி நன்மைசெய்கிறோமா? இவ்விதமான கேள்வி கேட்டாலே சிலர் சலித்துக்கொள்ளுகின்றனர். எங்கே எனக்கே ஒன்றுமில்லாதிருக்கையில் நான் எப்படி மற்றவர்களுக்கு உதவுவது என்பர். இவள் தன்னிடமிருந்த சிறிய ஊசியைக் கொண்டு தானே இந்த நற்கிரியைச் செய்தாள். அப்படியானால், நாம் நம்மிடமுள்ள சிறிய தாலந்துகளைப் பயன்படுத்தி கர்த்தரை பிரியப்படுத்தக் கூடாதா? அன்பு சகோதரியே, உங்களை நீங்களே வருத்திக்கொள்ளாதீர்கள். தேவன் உலகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் சில தாலந்துகளைக் கொடுத்துள்ளார். ஏதோ பெரிய டாக்டராகவோ, எஞ்சினியராகவோ அல்லது பெரிய அந்தஸ்தோடே பணபலமிக்கவராகவோ இருந்தால் தான் மற்றவர்களுக்கு உதவி செய்யமுடியும் என்று சொல்லி உங்களுக்குக் கொடுக்கப்பட்ட தாலந்தைப் புதைத்துப்போட்டு விடாதீர். இருக்கிற சிறிய தாலந்தை எவ்வாறு கர்த்தருக்கென்று பயன்படுத்தலாம் என்று சிந்தித்துப்பாருங்கள். சாறிபாத் என்ற ஊரிலிருந்த ஒரு விதவை தன்னிடமிருந்த கொஞ்சமாவையும் எண்ணெயையும் கர்த்தருக்கென்று பயன்படுத்தினாள். அதனால் பஞ்சகாலமெல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டாள். கர்த்தருக்கென்று ஒரு காரியத்தைச் செய்யும் போது மிகுந்த பலனைப் பெறுவோம்.

**2. தொற்காள் ஒரு பணிவிடைக்காரி:**

இவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள் என வசனம் 36-ல் வாசிக்கிறோம். நற்கிரியைகளையும், தருமங்களையும் சாதாரணமாகச் செய்யவில்லை மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்தாள் என வாசிக்கிறோம். இங்கே கவனியுங்கள்: அவள் வசூல் செய்து தானதர்மம் பண்ணினாளா? இல்லை. தன் சொந்தக் கைகளினால் வேலை செய்து, அதிலிருந்து வரக்கூடிய வருமானத்திலிருந்து மிகுதியாய் செய்தாள். உங்களுடைய தானதர்மம் எப்படிப்பட்டது? பவுல், "... கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (1கொரி.15:56) என்று எழுதுகிறார். கர்த்தருக்குப் பணிவிடைசெய்கிற சகோதரியே, கர்த்தருக்குச் செய்கின்ற கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாக, எச்சூழ்நிலையிலும் சோர்ந்து போகாது செய்கிறீர்களா? இல்லை, நமக்கொரு வெற்றி, நமக்கொரு பெரிய ஆசீர்வாதம், நமக்கொரு உத்தியோகம் கிடைத்தால் மட்டும் கர்த்தரை நினைத்து அவருடைய கிரியைகளில் ஈடுபடுகிறோமா? எல்லாமே எனக்குக் கிடைக்கவேண்டும், மகளுக்குத் திருமணமாக வேண்டும். மகனுக்கு வேலை கிடைக்க வேண்டும், நோய் குணமாகவேண்டும், இவையெல்லாம் இருந்தால் தான் கர்த்தருக்கடுத்த செயல்களில் ஈடுபடுவேன் என்கிறீர்களா? இம்மைக்குரிய ஆசீர்வாதங்களுக்காக மட்டும் கர்த்தரை பின்பற்றுவீர்களானால் மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாவீர்கள். இந்த தபீத்தாளுக்கோ எந்த உறவுமிருந்ததாக வேதம் கூறவில்லை. இவளுக்கு ஆதரவாகவும், உதவியாகவும் யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனாலும் நற்கிரியை செய்வதிலும், தருமங்கள் செய்வதிலும் எப்பொழுதும் பெருகுகிறவளாயிருந்திருக்கிறாள். "...நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்"

(கலா.6:10) என்ற வசனத்திற்கேற்ப தனக்குக் கிடைத்த சமயத்தையும் சூழ்நிலையையும் இவள் பயன்படுத்திக் கொண்டாள்.

**3. அறியப்பட்டவர்களால் நேசிக்கப்பட்டாள்.**

தபீத்தாள் செய்த உதவியினிமித்தம் அவளால் அறியப்பட்ட விதவைகள் தபீத்தாள் மரணமடைந்ததும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும், வஸ்திரங்களையும் காண்பித்து பேதுருவை சூழ்ந்து நின்றார்கள் என வசனம் 39-ல் வாசிக்கிறோம். அவளுடைய பிரிவை அந்த விதவைகளால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. எனவே அவர்களெல்லாரும் பேதுருவிடம் எல்லாவற்றையும் காண்பித்து அழுதிருக்கிறார்கள். நமக்கு அன்பான அருமையான ஒருவரை நாம் மரணத்தின் மூலம் இழக்கும்போது நாமும்கூட அவர்கள் உயிரோடிருந்தபோது செய்த நற்காரியங்களைச் சொல்லி அழுகிறோமல்லவா? ஏன்? நாம் அவர்களிடம் கொண்ட அன்பு அவ்வாறு நம்மைச் செய்யத் தூண்டுகிறது. தபீத்தாள் மீது கொண்ட அன்பு, தபீத்தாள் அவர்களுக்குச் செய்த உதவியினால் வந்தது. எனவே அதையெல்லாம் காண்பித்து அழுதார்களென வாசிக்கிறோம். வல்லமையுள்ள தேவனோ பேதுருவைக்கொண்டு இந்த தபீத்தாளை உயிரடையச் செய்தார். இது யோப்பா பட்டணம் எங்கும் தெரியவந்தபோது அநகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள். அன்பு சகோதரியே, தபீத்தாளிடமிருந்த அந்த சிறிய ஊசி எப்பேர்பட்ட காரியத்தைச் செய்துள்ளது! இவளுடைய ஜீவியம் நமக்கு ஒரு நல்மாதிரி அல்லவா! தேவனால் உண்டாக்கப்பட்ட அவருடைய ஜனங்களாகிய நாமனைவரும் ஒரு சில தாலந்துகளை நிச்சயமாகவே பெற்றிருக்கிறோம். நாம் செய்யவேண்டிய பணிகள் அதிகம். இந்தப்பணிகளைச் செய்யவேண்டியது தேவனுடைய திட்டமாயிருக்கிறது. நமக்குக் கொடுக்கப்பட்ட தாலந்திற்கேற்ப நாம் என்ன செய்யவேண்டுமென சிந்திப்போம். கர்த்தர் தாமே தம்முடைய சித்தத்தின்படி அவருடைய கிரியையிலே நாம் பெருகும்படி நமக்கு உதவிசெய்வாராக!

**இவ்விதழில் வெளிவந்துள்ள ஒவ்வொரு செய்தியிலிருந்தும் ஒவ்வொரு கேள்வி கேட்கப்பட்டுள்ளன. சரியான விடை எழுதி அனுப்பும் ஒவ்வொரு வாசகருக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன.**

**இம்மாத இதழ் வேத அறிவுப்போட்டி**
***TWOC NO.1* ஆகஸ்ட் 2024**

வாசகருக்கான நற்செய்தி

1. விழித்திரு செய்தியில் எத்தனைபேர் புத்தியுள்ளவர்கள்?
2. சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் என வேதவசனத்தை கோடிட்டு காட்டிய செய்தியாளர் யார்?
3. எவனைத் தண்ணீர் இல்லாததுரவிலே இறக்கிவிட்டார்கள்?
4. புதிய ஏற்பாட்டில் இயேசுவின் சகோதரன் எழுதிய புத்தகம் எது?
5. மெதுவான பிரதியுத்தரம் எதை மாற்றும் என எந்த சகோதரி எழுதியுள்ளார்?
6. தபீத்தாள் ஒரு சீஷியா?
7. ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்துபோவாயானால் உன் பெலன் எப்படிப்பட்டது?

இப்போட்டியில் கலந்து கொள்ளுகிறவர்கள் உங்களுடைய **Ref.No,** உங்களுடைய முழு முகவரி மற்றும் உங்கள் மொபைல் எண்ணுடன் எழுதி இம் மாதம் 25 -ம் தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்கவும்.

உங்களுக்கான பரிசுகளை பதிவு தபால் மூலம் இம்மாத இறுதியில் அனுப்பிவைப்போம். நீங்கள் போஸ்ட் மேனிடம் நேரடியாக கையொப்பம் இட்டு பெற்றுக்கொள்ளலாம். தேவன் உங்கள் முயற்சியை ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

**குறிப்பு:** முன்னமே தொடர்ந்து அறிவுப்போட்டியில் கலந்துகொள்ளுகிறவர்கள் இதிலும் கலந்து கொள்ளலாம் ஆனால் தனி தபால் மூலம் பதில் எழுதி அனுப்பவேண்டும். நன்றி.

அன்புடன் ஆசிரியர்



# துவாலையின் பாடம் -1

## Lessons of the Towel

*- Jerry Bates*

**சென்ற மாதத் தொடர்ச்சி...**

**உ) ஊழியம் செய்கிறவனாயிருக்கும்படி ஒருவன் தாமாகவே தன்னை சேவகனாக்கிக் கொள்ள அவனை உந்தும் சக்தி எது? அன்பு.**

1. முதல் வசனத்தில் கவனியுங்கள். அங்கே கிறிஸ்துவின் அன்பு அழுத்தமாக சொல்லப்பட்டிருக்கிறது. அவர் தம்முடைய சொந்த சீடர்களை கடைசிவரை நேசித்தார். கிறிஸ்துவின் அன்பு எல்லையில்லாதது.

2. நீங்கள் கிறிஸ்து நேசித்ததுபோல் நேசித்தால் நீங்கள் அவரைப்போல் செய்ய யாரும் சம்பளம் கொடுக்க வேண்டியதில்லை. தென் கிழக்கு ஆசியாவிலுள்ள ஒரு மருத்துவமனையை பணக்கார அமெரிக்கர் ஒருவர் ஒருமுறை பார்த்தார் கழிவுநீர் செல்லுமிடத்தில் படுத்திருந்த ஒரு முதியவரை சேவையினிமித்தம் வேலை செய்த ஒரு சேவகிப்பெண் அவருடைய புண்களை சுத்தம் செய்வதைப் பார்த்தார். அந்த நபர் செவிலியரிடம் எனக்கு பத்துலட்சம் டாலர் கொடுத்தாலும் இதை நான் செய்யமாட்டேன் என்றார். அந்த மருத்துவ உதவி செய்யும் பெண் அமைதியாக சொன்னார். நானும் கூடத்தான் ஆனால் பணத்தை விடவும் உயர்ந்த நோக்கங்கள் உண்டு.

**2. பரிசுத்தத்தைப் பற்றிய பாடங்கள் நாம் படிக்கவேண்டும் (13:6-11)**

அ) பேதுருவிடம் இயேசு வந்தபோது பேதுரு அவர் தம்முடைய கால்களையும் கழுவப்போகிறாரா என்று கேட்டார்.

ஒரு அடிமை செய்யும் தாழ்வான வேலையை தாம் ஏன் செய்யப்போகிறோம் என்பது அப்போது அவருக்குப் புரியாது ஆனால் பிறகு புரியும் என்று விளக்கிச் சொன்னார். அதாவது அவருடைய மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் மற்றும் ஆவியானவருடைய வருகைக்குப் பின்பு அவருக்கும் (பேதுருவுக்கும்) புரியுமென்றார்.

1. பேதுருவுக்கு புரியவில்லை. தன்னுடைய கால்களை இயேசு ஒருபோதும் கழுவக்கூடாது என்றார். கிரேக்க மொழியிலே அந்த வாக்கியத்தில் இரண்டு எதிர்மறை சொற்கள் இருக்கின்றன அது சொன்ன எதிர்மறையை மேலும் அழுத்திச் சொல்வதற்காக "நீர் ஒருபோதும் ஒருபோதும் என் கால்களைக் கழுவக்கூடாது"

2. உன் கால்களை நான் கழுவாவிட்டால் நமக்குள் ஐக்கியம் இருக்காது என்று இயேசு சொன்னார்.

3. பேதுரு பதிலாக என் சரீரம் முழுவதையும் கழுவும் என்றான்.

4. தனக்குரிய தாழ்மையிலே கிறிஸ்துவை விடவும் அதிகமாக தனக்குத் தெரியும் என்று பேதுரு நினைத்தார். நம்மில் அநேகருக்கு இருக்கும் பிரச்சனை பேதுருவுக்கும் இருந்தது. கர்த்தர் பார்க்கிறது போல் நாமும் பார்ப்பது.

**ஆ) அசுத்தமான பாகங்கள் கழுவப்பட்டாலே போதும் என்று இயேசு சொன்னார்.**

1. பின்பு இயேசு அனைவரிடமும் பேசுகிறார் அவர்கள் அனைவரும் சுத்தமாயிருக்கிறார்கள்.

2. ஆனால் அவர்களில் அனைவரும் சுத்தமாயிருக்கவில்லை. இது தெளிவாக யூதாசைப் பற்றிய குறிப்பாகும் (13:11) அவர்கள் அனைவரும் சரீரத்தில் சுத்தமாயிருந்தார்கள் ஆன்மாவிலல்ல. யூதாசுக்கு இருந்த பிரச்சனை அசுத்தமான

கால்களல்ல ஆனால் அவனுடைய அசுத்த இருதயமாகும்.

**இ) இங்கே ஆவிக்குரிய ஒரு பாடத்தை இயேசு போதிக்கிறார். இயேசு சிலுவையில் அவமானப்படுத்தப்பட்டு அனுபவித்த பாடுகள் மனிதர்களையும் பெண்களையும் அவர் சிந்திய இரத்தத்தால் பாவங்கள் நீங்க சுத்திகரிக்கும்.**

1. இயேசுவானவரால் நாம் அனைவரும் கழுவப்பட வேண்டும். இயேசுவானவரின் இரத்தம் நம்மனைவரையும் பாவங்களறக் கழுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நம்மைக் கழுவிய அவருக்கே மகிமையும் வல்லமையும் உண்டாயிருப்பதாக. (வெளி.1:6)

2. அப்.22:6

3. வாழ்க்கையில் நாம் அழுக்காக கடந்து செல்லும் போது தொடர்ந்து கழுவப்படுவது நமக்கு அவசியமாயிருக்கிறது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் நம்முடைய பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார் (1யோவான் 1:9).

**3. மகிழ்ச்சியின் பாடம் (13:12-17)**

அ) "கால்களைக் கழுவ" நாம் கற்றுக்கொள்ளவேண்டும்

1. இயேசு தன் இடத்திற்குத் திரும்பிவந்த பின்பு தாம் செய்ததை புரிந்து கொண்டீர்களா என்று அவர்களை உபசரித்த இயேசு கேட்டார். "கருத்து இன்னதென்று உங்களுக்குப் புரிகிறதா?

2. சேவை செய்துகொண்டு எஜமானாக இருப்பது ஒன்றும் பொருந்தாதொன்றில்லை.

3. இயேசு சொன்னார் நீங்கள் என்னை போதகர் என்றழைக்கிறீர்கள். அவர்களுடைய போதகராக அவர் இருந்தார். போதகருக்கு எது பொருத்தமாயிருக்குமோ அது சீடர்களுக்கும் பொருத்தாயிருக்கும்.

4. இயேசு அவர்களிடம் தம்முடைய கால்களைக் கழுவும்படி சொல்லும்படி நாம் எதிர்பார்க்கலாம் இன்னும் அவர்கள் அசுத்தமாகவே இருக்கிறார்கள் நம்மில் அநேகர் இயேசுவின் கால்களைக் கழுவத்தயங்கமாட்டோம். ஆனால் அவர் அவர்கள் ஒருவர் கால்களை ஒருவர் கழுவ வேண்டும் என்றார்.

**ஆ) எந்தக்கால்களை நாம் கழுவவேண்டுமென்று இயேசு விரும்புகிறார்.**

1.நம் நண்பருடையவைகளையா? அது மிகவும் மோசமாயிருக்காது.

2. ஆனால் இயேசு யூதாசின் கால்களையும் கூட கழுவினார். அதைப்போல மற்றவர்களுடைய கால்களைக் கழுவினார்.

3. நாம் எல்லாருடைய கால்களையும் கழுவவேண்டும் நண்பன், பகைவன் இருவரது கால்களையும் சமமாகக் கழுவவேண்டும் (13:16)

**இ) கால்களைக் கழுவும் சடங்கு ஒன்றை நாம் செய்யவேண்டுமா?**

1. எப்போதாவது சில மதக் கூட்டத்தார் செய்கிறார்கள். இதிலே பங்குபெறும்படி தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் சுத்தமான பாதங்களோடு சபைக்கு வருகிறார்கள். யார் கழுவுகிறார்களோ அவர்கள் சுத்தமான கால்களுள்ள வரிசையையே சரியாகக் கழுவுகிறார்கள். முக்கியமான அடிப்படை நோக்கம் அசுத்தமான கால்களைக் கழுவ வேண்டுமென்கிற நோக்கம் தொலைந்துபோகிறது.

2. புதிய ஏற்பாட்டில் இதைத்தவிர வேரு ஒரு இடத்தில் இதைப் பற்றி குறிப்பிட்டிருப்பது 1தீமோ.5:9-10 வசனங்களில் இங்கே சபையால் ஆதரிக்கப்பட வேண்டிய விதவைகளின் தகுதிகளைப் பற்றி குறிப்பிடுகையில் இதைச் சொல்லுகிறார்.

3. ஆதிக்கிறிஸ்தவர்களின் துவக்ககாலக் குறிப்புகளில் கால் கழுவுவதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. அந்த விதமான சடங்கு சபைத் தொழுகையில் துவக்க காலங்களில் ஒருபோதும் கைக்கொள்ளப்படவில்லை.

4. சார்லஸ் ஹட்ஜ் சொன்னபடி "நாம் கால்கழுவுவதைப்பற்றிய விவாதங்களில் வெற்றி பெற்று இருக்கலாம். ஆனால் நாம் இன்னும் கால்களை கழுவ கற்றுக்கொள்ளவில்லை" இந்த 21-ம் நூற்றாண்டில் சமமாயிருப்பவர்கள் பிறருக்கு சேவை செய்ய மனதாயிருப்பவர்கள். அவர்கள் யாராயிருந்தாலும் கவலையில்லை அதற்காக எவ்வளவு செலவானாலும் கவலையில்லை. அந்த வேலை எவ்வளவு மோசமானதாயிருந்தாலும் கவலையில்லை.

5.ரூத் ஹார்மஸ் காள்கின் என்வர் 'நான் வியக்கிறேன்' என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதினார். கர்த்தாவே மிகுந்த புகழ்ச்சியிலும் எப்படி ஊக்கமாய் உமக்கு ஊழியம் செய்கிறேன் என்பது உமக்குத் தெரியும் பெண்கள் சங்கத்தில் எவ்வளவு உணர்வுபூர்வமாய் உமக்காகப் பேசுகிறேன் என்பது உமக்குத்தெரியும். ஒரு ஐக்கியக்கூட்டத்தை கட்டி உருவாக்கும் போது உற்சாகப் பெருக்கில் செயல் படுகிறேன் என்று உமக்குத் தெரியும் வேத வகுப்பில் எனது உண்மையான உற்சாகம் உமக்குத் தெரியும். ஆனால் நான் எப்படி செயல்படுவேன், வியக்கிறேன்! நீர் ஒரு பாத்திரத்திலுள்ள தண்ணீரிடம் என்னை போகச் சொல்லி ஒரு கொடூர மனநிலையில் கூனி சுருங்கிப்போனவரின் கால்களைக் கழுவச் சொன்னால் ஒரு நாள் மாறி மறு நாள், மாதம் சென்று மாதம். யாரும் காணாத யாரும் அறியாத அறையில்.

6. உனக்காக "எத்தனைபேர் வேலை செய்கிறார்கள் என்று உலகம் கேட்கிறது" கர்த்தர் கேட்கிறார் எத்தனை பேருக்காக நீ பணிசெய்கிறாய்? என்று

**ஈ. "கால்களைக் கழுவுவது" என்பது மகிழ்ச்சிக்கான திறவுகோல் (13:'7)**

1. ஏதோ தெரிந்துவைத்திருப்பது மட்டும் போதுமானதல்ல. பிறருக்கு நாம் சேவை செய்யவேண்டும். கண்டிப்பாக நாம் செய்யவேண்டும்.

2. பாக்கியவான் என்கிற வார்த்தையும் இயேசு பரமானந்தத்தைப் பெறுவதற்காக போதித்த வார்த்தைகளிலே சொன்ன பாக்கியவான் என்பதும் ஒரே பொருளுடையது தான். இது புறச்சூழலைச் சார்ந்திராது உள்ளன, சந்தோஷம் அல்லது மகிழ்ச்சியை குறிப்பிடுவதாகும்.

3. உலக அளவுகளின்படி இது பொருள் தராது. சந்தோஷம் என்பது பிறர் தரும் பொருட்களாலோ அல்லது பிறர் நமக்கு செய்யும் சேவையாலோ கிடைப்பது என நாம் நினைக்கிறோம். ஆல்பர்ட் சுவைட்சர் என்பவர் குறிப்பிடுவது உங்களுடைய முடிவு எப்படியிருக்கும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று எனக்குத் தெரியும், மக்களுள் யார் சந்தோஷமாயிருப்பார் என்றால், பிறருக்கு சேவை செய்யும் வழியை கண்டுபிடித்தவர்தான்.

**முடிவுரை:**

1. நான் சேவை செய்ய சித்தமாயிருக்கிறேனா? ஜீன் ஸ்ட்ரீட் தொடர்ச்சியாக நடத்திய உணவு விடுதி வியாபாரத்தில் லட்சக் கணக்கில் சம்பாதித்தனர். உணவு விடுதி நடத்தும் தொழிலில் எப்படி வெற்றிகரமாக இருக்க முடிந்தது என்பதைக் கண்டறிந்ததைப் பற்றி கூறுவது. "உனக்கு ஒரு வேலையாளின் மனப்பான்மை இல்லாவிட்டால் அது செயல்படாது. இது ஒரு விடுதி விஷயத்தில் உண்மையானால் சபையைப் பொறுத்தமட்டில் இது எவ்வளவு அதிகம்.

2.நடத்தும் தலைவர்கள் கூட (ஏன் விசேஷமாக என்று சொல்லலாம்) கட்டாயம் சேவகர்களாயிருக்க வேண்டும்.

3. சபையானது சேவை செய்யக் கூடியதாயிருக்க வேண்டும். மற்றவர்களின் சேவகனாய், கடவுளின் சேவகனாயிருக்க வேண்டும்.

சிறுவர் பகுதி

# ஞாயிறுபள்ளி - Sunday School

இராணுவ மருத்தவமனை ஒன்றில் ஜேம்ஸ் என்ற இராணுவ வீரன் கொடிய காயங்களுடன் சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்து ஜெபிப்பதற்காக



அவனுடைய சபை போதகர் மருத்துவமனைக்குச் சென்றிருந்தார். ஜேம்ஸ் மிகவும் மோசமான நிலையிலிருக்கிறான் என்பதை அறிந்தார் அந்த ஊழியக்காரர். அப்பொழுது ஜேம்ஸ் இலேசாக கண்களைத் திறந்து, போதகரைப் நோக்கி எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும் என்று சொல்லி தன்னுடைய பாக்கெட்டிலிருந்து முகவரிகள் அடங்கிய சிறிய ஒரு நோட்டை எடுத்து அதில் தன்னுடைய ஞாயிறு பள்ளி ஆசிரியையின் முகவரியைச் சுட்டிக்காட்டி ஐயா என்னுடைய சார்பில் இந்த ஞாயிறுபள்ளி ஆசிரியைக்கு ஒரு கடிதம் எழுதவேண்டும் என்று அவரைக் கேட்டுக்கொண்டான்.

அவன் சொல்ல அவர் எழுதினார். “அன்புள்ள ஞாயிறுபள்ளி ஆசிரியருக்கு, தேவனுடைய வசனத்தில் சொல்லப்பட்டபடியே எனக்குத் தெளிவாக போதித்தீர்கள். அதன் காரணமாக நான் உண்மையான கிறிஸ்தவனாக மாறினேன். இப்பொழுதும் என் இரட்சகராகிய இயேசுவை சந்திக்க நான் ஆயத்தமானேன். என்னை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவண்டை வழிநடத்தியதற்காக நான் மிகுந்த நன்றியுள்ளவனாயிருக்கிறேன்” என்று எழுதச்சொன்னான். அவனுடைய சபைபோதகரும் அப்படியே எழுதி தாமதமின்றி அனுப்பிவைத்தார். அக்கடிதத்திற்கு உடனடியான பதிலும் ஆசிரியையிடமிருந்து வந்தது.

அதில் “அன்புள்ள ஜேம்ஸ்க்கு நான் கடந்த மாதத்தில்தான் ஞாயிறுபள்ளி ஊழியத்தை விட்டு விட்டேன். ஆனால் உன்னுடைய கடிதம் என்னுடைய சோர்வை மாற்றினது. நான் உற்சாகப்படுத்தப்பட்டு தேவனிடத்தில் முறையிட்டு மீண்டும் இந்த ஞாயிறுபள்ளி ஊழியத்தைச் செய்ய தீர்மானித்துவிட்டேன். என்னை உற்சாகப்படுத்திய உன்னுடைய அன்பான கடிதத்திற்கு நன்றி சொல்கிறேன். கர்த்தர் உம்மை வழிநடத்துவாராக என்று எழுதியிருந்தார்கள். கடிதத்தை வாசித்த சபைபோதகர் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடின, அந்த கடிதத்தை வாசிக்க ஜேம்ஸ் இல்லை. அவன் பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்துவிட்டான்.

ஞாயிறுபள்ளி ஊழியத்தின் மூலமாக தேவன் பெரிய காரியங்களைச் செய்கிறார். ஞாயிறுபள்ளி ஆசிரியர்களைக் கொண்டு பிள்ளைகளை மெய்யான கிறிஸ்தவர்களாக உருவாக்குகிறார். பிள்ளைகளைக் கொண்டு உற்சாகமிழந்த ஆசிரியர்களை உற்சாகப்படுத்துகிறார். ஆ... தேவனுடைய செய்கைகள் எவ்வளவு மகத்துவமானவைகள்!

**“ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது” - நீதிமொழிகள்24:10**

# Gospel Preaching On Television

### Rajanayagam in Tamil:
Nambikkai TV: Tuesday 6:30 - 7:00 am
Heaven TV: Thursday, Friday and Saturday
6:30 - 7:00 am

### Philemon & Kingsley in Tamil
Tamilan TV: Sunday 7:00 - 7:15 am
Nambikkai TV: Sunday 3.30 - 4.00 pm

### Hindi TV program:
### Sunny, Francis, & Vinay David
Sunday &Tuesday 7:00 - 7:30 pm & Friday
8.00 - 8.30 pm on Shubhasandesh Hindi Channel

### P. K. Varghese in Malayalam:
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind
Channel TV

### Joshua & Ricky Gootam in Telugu:
Every Sunday at 6:30 pm on Subhavartha Channel
Saturday at 6:30 am Aradhana Channel
Every Day at 7.30 am and 3.30 pm on Kanthi TV in A.P Only
YouTube and Faebook24 hrs.daily
Click on Satyavani Church of Christ

### Amul Bansod - Aurangabad (Marathi):
MCN News Channel Monday, Wednesday & Friday
7:30 - 8:00 am

### Arjunan in Tamil:
Every Monday, Tuesday and Wednesday 6.00 pm on Joy TV
Every Thursday, Friday and Saturday 6:00 pm on Heaven TV






The English Voice of Truth
Book is available
Contact:
P.C.Philemonraja or Kingsley
P.O.Box.15. Arasaradi
Madurai - 625 016
Mobil:92442 04420 / 92442 04421

The Voice of Truth
Book in Tamil is available
Contact:
E.Z.Rajanayagam or Bennaimartin
P.O.Box.27. Dharapuram Road
Kankayam - 638 701
Mobil:98427 30382 / 98652 90572

## வேத அறிவுப் போட்டி எண்: 288

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. ஆசாரியனுடைய குமாரத்தி அந்நியனுக்கு வாழ்க்கைப்பட்டால், அவள் பரிசுத்தமானவைகளின் படைப்பிலே புசிக்கலாமா?
2. உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சைபார்த்து, எத்தனை வருஷ காலம் என் கிரியைகளைக் கண்டார்கள் என்றார்?
3. கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் ஜனங்களுக்கு மூப்பரும் தலைவருமானவர்கள் இன்னார் என்று நீ அறிந்திருக்கிறாயே அவர்களில் எத்தனைபேரை கூட்டிச்சேர் என்றார்?
4. பிசாசுகளும் விசுவாசித்து எவருக்கு நடுங்குகின்றன?
5. குற்றவாளி அடிகளுக்குப் பாத்திரவானானால், அவனை எத்தனை அடிவரைக்கும் அடிக்கலாம்?
6. நீங்கள் நன்மைசெய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் எவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்?
7. நதிக்கு அப்புறத்தில் இருந்த எவனை அழைத்துக் கொண்டுவந்து, அவனைக் கானான் தேசமெங்கும் சஞ்சரிக்கச் செய்தார்?
8. இந்த இரண்டாம் நிருபத்தை இப்பொழுது உங்களுக்கு எழுதுகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
9. இஸ்ரவேலை ஏழு வருஷம் நியாயம் விசாரித்து பின்பு மரித்து பெத்லெகேமிலே அடக்கம் பண்ணப்பட்டவன் யார்?
10. நாங்கள் தேவனால் உண்டானவர்கள் தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான் என எழுதும் அப்போஸ்தலன் யார்?

## வேதாகம ஆய்வு... 72

### தீகிக்கு
### Tychicus

1. ஆசியா நாட்டை சார்ந்தவன் – 2கொ.8:16
2. பவுலோடு ஊழியத்தில் – அப்.20:4
3. கர்த்தருக்குள் உண்மையுள்ள ஊழியக்காரன் – எபே.6:21
4. பவுலால் எபேசுவுக்கு அனுப்பப்பட்டவன் – 2தீமோ.4:12
5. தீகிக்குவை தீத்துவிடம் அனுப்புவதாக பவுல் எழுதுகிறார் – தீத்து 3:12



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2024-2026
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2024-2026
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.

August 2024



சகோதரர் பிரபாகரன் அவர்கள்
பலவருடங்களாக
நாமக்கல் மாவட்டத்தில்
கர்த்தருடைய சபைபணியை செய்து
தற்போது கோவை மாட்டத்தில்
அவரது மூத்த சகோதரனின்
பராமரிப்பில் உள்ளார்
அவருக்காக ஜெபியுங்கள்
'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்'
மாத இதழக்காக ஊழைத்தவர்
அவரை வாழ்த்துவதில்
சந்தோஷம் அடைகிறோம்

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
**The Word of Christ,**
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA



கலிலேயா கடல்

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



love God
love people
be a servant